

கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை, அவரது இல்லத்தில், முன்னாள் அமைச்சரும், கழக உயர் நிலை செயல்திட்டக்குழு உறுப்பினருமான பொன் முத்துராமலிங்கம், தமது பிறந்த நாளை முன்னிட்டு சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

# 200க்கும் அதிகமான தொகுதிகளில் நிச்சயமாக வெற்றி பெறுவோம்!

## மாலை மலர் ‘நச்சுன்னு நான்கு கேள்விகள்’ பகுதிக்கு – அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி சிறப்புப் பேட்டி!

சென்னை, ஏப்.19-

தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி அரசியல் நிலவரம் குறித்து கேட்ட 4 கேள்விகளுக்கு அளித்த பதில்கள் வருமாறு:



**கேள்வி:** வருகிற பொதுத் தேர்தலில் தி.மு.க. 200 தொகுதிகளில் வெற்றி இலக்கை எட்ட முடியும் என்று நினைக்கிறீர்களா?

**பதில்:** நிச்சயமாக எட்ட முடியும். அதற்குரிய வியூகங்கள் வகுத்து பணியாற்றிக் கொண்டு இருக்கிறோம். முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆட்சியில் எண்ணற்ற திட்டங்களால் மக்கள் பயன் அடைந்து வருகின்றனர். அவர் எதிர் கொண்ட அத்தனை தேர்தலிலும் வெற்றியை பெற்று உள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலில் எப்படி தமிழகத்தில் முழு வெற்றி பெற்றோமோ அதைப் போல் வர இருக்கிற சட்டசபை தேர்தலிலும் 200க்கு அதிகமான தொகுதிகளில் கண்டிப்பாக வெற்றி பெறுவோம்.

காரணம் நாடாளுமன்றத் தேர்தலுக்கு பிறகு தி.மு.க. ஆட்சிக்கு சாதகமாக பலவிதமான சூழல் வந்துள்ளது. ஆளுநர் விசயத்தில் உச்சநீதி மன்ற தீர்ப்பு, தொகுதி மறுவரையறை பிரச்சினை, மும்மொழிக் கொள்கை, இதெல்லாம் எங்களுக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கை அதிகரித்து உள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. பாரதிய ஜனதாவை எதிர்த்து நின்ற போது சிறுபான்மை ஓட்டு பிரிந்தது. ஆனால் இப்போது அவர்கள் இருவரும் கூட்டணி அமைத்துள்ளதால் ஓட்டு மொத்த சிறுபான்மை ஓட்டுகள் எங்களுக்குதான் வரும். எனவே இதுவும் எங்களுக்கு சாதகமாகத்தான் அமையும்.

ஒன்றிய அரசின் மீதான வெறுப்பு அதிகமாக உள்ள இந்த நேரத்தில் அ.தி.மு.க. அங்கே போய் சேர்ந்திருப்பது எங்களுக்கு நல்ல சாதகம்.

**கேள்வி:** அ.தி.மு.க. பா.ஜனதா கூட்டணியை கண்டு தி.மு.க. பயப்படுகிறதா?

**பதில்:** ஏற்கனவே 2021 தேர்தலில் அவர்கள் சேர்ந்து தானே வந்தார்கள்? அதென்ன பயப்பட வேண்டும்.

மேற்கு தமிழகத்தில் அவர்கள் ஓட்டு வாங்கியதற்கு காரணமே 10.5 சதவீத இடஒதுக்கீட்டை காரணம் காட்டி கடைசி நேரத்தில் ஏமாற்றி ஓட்டு வாங்கி விட்டார்கள். இப்போது அதுவும் இல்லை. ஏமாற்று வேலை என்று மக்களுக்கு தெரிந்து விட்டது. அதனால் அந்த ஓட்டும் இந்த முறை இவர்களுக்கு போக வாய்ப்பு இல்லை.

**கேள்வி:** அமைச்சர் பொன்முடியின் சமீபத்திய பேச்சு தி.மு.க. வெற்றியை பாதிக்குமா?

**பதில்:** இந்த தேர்தலை பொறுத்தவரை தமிழ்நாட்டு அரசியல் எப்படி ஆகி விட்டது என்றால் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலினுக்கும் அவரை எதிர்க்கக்கூடிய மற்றவர்களுக்கும் இடையேயான போட்டி என்றாகி விட்டது.

முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமை. அவரது ஆளுமை, ஒரு காலத்தில் எம்.ஜி.ஆர். கருணாநிதி, கருணாநிதி ஜெயலலிதா போட்டி மாதிரி,, இப்போது தளபதி மு.க. ஸ்டாலின் மற்ற அணியினர் என்றாகி விட்டது. அதாவது நேற்று வந்தவர்கள், முந்தாநாள் வந்தவர்கள், சேர்த்துதான் சொல்கிறேன். எல்லோரையும் சேர்த்துதான் சொல்கிறேன்.

**கேள்வி:** காங்கிரஸ், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி எல்லாம் கூடுதல் ‘சீட்’ கேட்க திட்டமிட்டு உள்ளார்களே?

**பதில்:** எப்போதும் அவர்கள் கூடுதல் இடம் கேட்பார்கள். கடைசியில் எல்லாவற்றையும் சரி பண்ணி விடுவோம். போனமுறையும் அப்படித்தான் நடந்தது. ஒவ்வொரு தேர்தல் நேரத்திலும் கூடுதல் இடங்களை கூட்டணி கட்சிகள் கேட்பது வாடிக்கை தான். அதை சாமர்த்தியமாக தலைவர் தளபதி சமாளித்து இருக்கிறார்.

2019ல் இருந்து இது தொடர்கிறது.

இவ்வாறு ஆர்.எஸ்.பாரதி கூறினார்.

---



## தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்புகளுக்கு, இளைஞர் அணி அமைப்பாளர்–துணை அமைப்பாளர்களை, மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளருமான **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் மாவட்ட வாரியாக நியமித்து வருகிறார்.

சேலம் மத்திய மற்றும் விருதுநகர் தெற்கு ஆகிய மாவட்டங்களில் நியமிக்கப்பட்ட இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், அந்தந்த மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 19.04.2025 சனிக்கிழமை | காலை 9.00 மணி | சேலம் மத்திய | வீரபாண்டியார் அரங்கம், கலைஞர் மாளிகை, சேலம். |
| 19.04.2025 சனிக்கிழமை | காலை 9.00 மணி | விருதுநகர் தெற்கு | கந்தசாமி ராஜம்மாள் திருமண மண்டபம், விருதுநகர் |

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 16-04-2025



